தாமரை வெளியீடு.

தமிழ் வாழ்க.

# செய்யுள் இலக்கணம்

(குறிப்புரையுடன்)

*

77
04
18677

ஆசிரியர்,
ச. பாலசுந்தரம்,
கரந்தை.

*தாமரை வெளியீடு-3.*

# செய்யுள் இலக்கணம்

(குறிப்புரையுடன்)

*ஆசிரியர்*

**வித்துவான், ச. பாலசுந்தரம்**

*(பேராசிரியர் கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்)*

**தாமரை வெளியீட்டகம்**

154/89 வடக்குப் பெருந்தெரு

சாவூர்-1.

967

முதற்பதிப்பு தமிழ்ப் பொழில் 1952–53.
இரண்டாம் பதிப்பு 1967.

விலை : ~~0-60.~~
1-50

ஆசிரியரின் பிற நூல்கள்

கரந்தைக் கோவை
புலவருள்ளம் (நாடகம்)
ஆதிமந்தி ,,
சிவமும் செந்தமிழும் ,,
புரவலர் உள்ளம் ,,
திருமா வளவன் ,,
மழலைத்தேன்
(குழந்தைப் பாடல்கள்)

# நூன்முகம்

சங்ககால முதலாக இயற்றமிழ்ச் செய்யுள் மரபு பற்றிப் பலப்பல நூல்கள் தோன்றின; பல மறைந்தன; சிலவுள. தொல்காப்பியச் செய்யுளியல் ஓர்ந்துணரவும் உணர்ந்து கையாளவும் அரிதெனக்கருதி ஆசிரியர் பலரும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை யாய நூல்களையே பயின்றும் பயிற்றுவித்தும் வருகின்றனர்.

இந்நாள் தமிழ்ப்புலவர் தேர்விற்கும் செய்யுள் இலக்கணம் யாப்பருங்கலக் காரிகையளவிலேயே நிற்கின்றது. ஆதலின் 1950—51-ஆம் ஆண்டில் தனித் தமிழ் வித்துவான் முதனிலை மாணக்கர்க்கு இந் நூலைப் பாடம் சொல்லும் வாய்ப்பினை யான் பெற்றபோது இதனைப் பிற யாப்பிலக்கண நூல்களோடு ஒத்திட்டு ஆராய்ந்தேன். யாப்பருங்கலக் காரிகை யாசிரியர் செய்யுளிலக்கணங்களைக் கட்டளைக் கலித்துறைப் பாவால் உணர்த்த விரும்பி யமைத்தமையான் இலக்கண விளக்கங்கள் சுருங்கின. அவற்றை விதப்பாலும் உத்திகளாலும் உரையாசிரியர் ஓரளவு விரித்துரைப்பாராயினர். அவ்வளவில் யாப்பிலக்கணம் பற்றிய இன்றியமையாத மரபுகள்யாவும் எளிய நடையமைந்த நூற்பாக்களால் ஆக்கித் தருவது மாணுர்க்குத் தெளிவும் பயனும் நல்குமெனக் கருதி அவற்றை 133 நூற்பாக்களாக யாத்து ஒன்பது பகுதிகளாகப் பிரித்தமைத்து 1952–53 ஆண்டுத் தமிழ்ப் பொழில் இதழில் வெளியிட்டேன். அதனைக்கண்ணுற்ற என் பெருமதிப்பிற்குரிய தமிழ்ப் பேரறிஞர் திரு. நீ. கந்தசாமி பிள்ளையவர்கள் இதனை நம் தமிழ்ச் சங்கப் புலவரவையிலேயே அரங்கேற்றவேண்டுமென்று கூறி என்

னுடைய ஆசிரியப் பெருந்தகைகளான திரு. ந. இராமநாதன், திரு மு. சடகோபராமானுசம் பிள்ளையவர்களோடு பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்களையும் கூட்டித் தாமும் உடனமர்ந்து ஆராயத்தொடங்கிச் சில நூற்பாக்களை ஆய்ந்தபின் முழுதும் ஆராயும் பொறுப்பைத் திரு. அடிகளாசிரியர் அவர்களிடம் ஒப்பித்தார்கள். அவர்கள் நன்கு ஆய்ந்து சில திருத்தங்களையும் கூறி என்னிடம் அளித்தார்கள்.

பின்னர்க் காண்டிகையளவிலாவது உரையோடு சேர்த்து வெளியிட எண்ணியிருந்தேன். உரையோடு வருவதற்குமுன் மூல பாடத்தையாவது அச்சிட்டுத்தர வேண்டுமென என்னுடைய அருமை மாணவ நண்பர்கள் வற்புறுத்தி வந்தமையின் இன்றியமையாத சில குறிப்புரைகளோடு இதுபோது வெளியிடலானேன்.

இந்நூலை இஞ்ஞான்றும் கண்ணுற்று ஓர் அரிய அணிந்துரை தந்தருளிய மதிப்பிற்குரிய பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கட்கு என் நன்றியும் வணக்கமும் உரிய. உடனிருந்து ஊக்கி உதவிவரும் கல்லூரி முதல்வரும், என் பேரன்பிற்குரிய நண்பருமான திரு. கு. சிவமணி எம். ஏ., பி. டி., அவர்கட்கும் அழகுற அச்சிட்டுதவிய மகாலிங்கம் பதிப்பகம் பொறுப்பாளர் திரு. நா. சின்னையா அவர்கட்கும், தமிழ்ப் பொழிலில் வெளியிட்டும் தனி நூலாக வெளியிட இசைந்தும் உதவிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாருக்கும் மிக்க நன்றியுடையேன்.

இச்சிறு மலரை உருவாக்க அருளித் தன் இணையடிகளில் ஏற்றருளும் தமிழன்னையைப் போற்றி வணங்குகின்றேன்.

அன்பன்.

*ச. பாலசுந்தரம்.*

# அணிந்துரை

வித்துவான், திரு. அடிகளாசிரியர்
*(பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி)*

அறிய வேண்டிய நற்பொருள்களை ஐயந் திரிபின்றி உண்மையாக அறிந்து கொண்டவர் புலவராவார். இவர்கட்கு மேலோர், பண்டிதர், புலவர், ஆசிரியர், புந்தியர், மேதையர், ஆன்ருேர், சான்ருேர், அறிஞர், கலைஞர், பாவலர். விற்பனர், கற்ருேர், கவிஞர், நாவலர், எழுத்தாளர் என்பன முதலான பல பெயர்கள் வழங்குகின்றன.

இப்புலவர் பெருமக்கள் தம் புலமை நலம் பொலிய இவ்வுலக மக்களுக்குப் பல சுவைப்பாடல்களைப் படைத்துக் கொடுக்கின்றனர். இப்புலவர்களால் பாடல் பெறுவது பெறற்கரிய பேறுகளுள் சிறந்ததென்றும். பாடல் பெருதொழிவது மிக இழிந்ததென்றும், மக்கள் கருதி வந்துள்ளனர். இக்கருத்துக்களை

" புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தி
எய்துப என்பதம் செய்வினை முடித்தென "

புறம்—27

" மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை"

புறம்—72

என்னும் புறநானூற்றுப் பாடல்களால் அறிந்து கொள்ளலாம்.

மக்களேயன்றித் தேவர்களும் நல்லிசைப் புலவரால் பாடல் பெறுவதைச் சிறந்ததென்று கருதியுள்ளனர். இதனைச், சிவபெருமான் நம்பியாரூரரை நோக்கி

“ நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, அற்சனை பாட்டே யாகு மாதலான் மண்மேல் நம்மைச் சொற் றமிழ் பாடு கென்றார்’’ என்று கூறியதாகப் பெரிய புராணம் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு சிறந்த பாட்டிற்கு வெவ்வேறு காரணங் களால் பல பெயர்கள் வழங்கப்பட்டிருத்தலை

“ தூக்கும் யாப்பும் செய்யுளும் கவியும்
பாட்டுந் தொடர்பும் பாவென் றாகும் ’’

என்னும் பிங்கல நிகண்டால் அறியலாம். இப்பெயர்கள் என்ன காரணம்பற்றி வழங்கப்பட்டன என்பதை ஆராய் வோம்.

இவற்றுள் ‘தூக்கு, என்றால் ஓசை என்று பொருள். இதனைத் ‘தூக்கெனினும் ஓசையெனினும் ஒக்கும், என்று (தொல்–பொரு–386) இளம்பூரணர் உரைக்கும் உரை யால் உணர்ந்துகொள்ளலாம். எனவே அகவலோசை, செப்பலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என் னும் உறுப்புக்கள் அமையப் பாடப்படும் பாட்டும் தூக் கென்று பெயர்பெறலாயிற்று.

எழுத்து, அசை, சீர் என்னும் இவற்றால் அமைந்த அடிகளால் குறித்த பொருளை முடிவுபெற நாட்டுவது யாப்பு என்னும் உறுப்பென்று (தொல்-பொருள்–383) தொல்காப்பியங் கூறுகின்றது. யாத்தல் என்பதற்குக் கட்டுதல் என்றும் பொருளுண்டு (383–பிங்கலம்) புலவன் தான் குறித்த பொருளை அடியால் கட்டியமைத்தலால் அவ்வாறு பாடப்படும் பாட்டும் யாப்பென்று பெயர் பெறலாயிற்று.

செய்யுள் என்பது எழுத்து அசை முதலான உறுப்புக் களாலும் மரபுவழிப்பட்ட நாற்சொற்களாலும் செய்யப் படுவதால் செய்யுள் என்று பெயர்பெறலாயிற்று இது

வழுவின்றி ஆராய்ந்து அமைத்துக் கொண்ட கிளவிக ளால் செய்யப்படுவதாதலின் 'தெரிந்துமொழிச் செய்தி' என்று பெயர்பெறும் (தொல்–சொல்–60) என்பர் தொல் காப்பியர்.

கவி என்னுஞ் சொல் தொல்காப்பியம் புறநானூறு போன்ற பழந்தமிழ் நூல்களில் பாட்டினையோ புலவ னையோ குறிக்கவந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத் தமிழ் நூல்களிற்றான் இச்சொல் வழங்கி வருகின்றது. வடமொழி நிகண்டாகிய அமரகோசத்தில் (உ–403) இது புலவனைக் குறிக்குஞ் சொல்லென்று கூறப்பட் டுள்ளது. கவி என்னும் அச்சொல்லிற்குக் (கவதே சாதுர்யேணேதி கவி:) சாதுர்யத்தால் வர்ணிப்பவன் கவி என்று வடமொழிப் புலவர்கள் காரணம் கூறுகின்றனர். எனவே எடுத்துக்கொண்ட பொருளைச் சாதுர்யமாக வர்ணிப்பது கவி என்றாகின்றது. இக்கவியென்னுஞ் சொல்லிலிருந்து பிறந்தது கவிதை என்னும் சொல் லாகும்.

பாடல் என்பது ஓசையமைந்தது என்று பொருள் படும். பாடு–ஓசை, பாவண்ணம் முதலான ஓசை விகற் பம் தோன்றப் பாடப்படுவதால் பாடல் என்றாயிற்று.

'தொடர்வு' என்பது எழுத்து அசை முதலான உறுப்புக்கள் தொடரவேண்டிய முறைப்படி தொடர்ந்து நிற்கப் பாடுவதாம். இது தொடர்நிலை என்றும் (தொல்–பொருள்–523–பேரா) கூறப்படும்.

எனவே அகவல் முதலான இயற்றமிழ் ஓசை அமையப்பெற்றும், அடிகளால் குறித்த பொருள் முடிய நாட்டப்பெற்றும், தெரிந்து அமைத்துக்கொண்ட உறுப்புக்களாலும் தெரிந்து அமைத்துக்கொண்ட கிளவி களாலும் செய்யப் பெற்றும். எடுத்துக் கொண்ட

பொருளைச்சாதுர்யமாக வர்ணிக்கும் நெறியைப் பெற்றும், பலவகை வண்ணங்கள் அமையப் பெற்றும் தொடர்பு பெற்றும் வருவது பாட்டாகும் என்பது போந்ததாம்.

இத்தகைய இயற்றமிழ்ப் பாட்டின் இலக்கணங்களைத் தொல்காப்பியம் விரிவாகக் கூறுகின்றது. யாப்பருங் கலம் யாப்பருங்கலக் காரிகை முதலானவை சுருக்கிக் கூறுகின்றன. இவ்விலக்கண நூல்களை யெல்லாம் நன்கு கற்றாலும் கற்ற அவர்களால் சிறந்த பாட்டுக்களைப் பாட முடிவதில்லை.

கரந்தைப் புலவர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும் எனது உழுவல் நண்பருமான புலவர் ச. பாலசுந்தரனார் அவர்கள் இயல்பாகவே பாடல்களைச் சுவையாக இயற்றும் நாவன்மை படைத்தவர். மேலும் தமிழிலுள்ள பலவகைச் செய்யுளிலக்கணங்களை யெல்லாம் நன்றாகப் பயின்றவர். அவர் தமிழ்ப் புலவர் வகுப்பிற் பயிலும் மாணவர் கட்குப் பயன்படும்படி நூற்று முப்பத்திரண்டு நூற்பாக் களும் ஒன்பது இயலும் அமைந்த செய்யுள் இலக்கணம் என்னும் பெயரமைந்த யாப்பிலக்கண நூலைத் தெளிவான நடையில் இயற்றித் தாமே அச்சிட்டு வெளிப்படுத்தி யுள்ளார்கள். இவர்கள் செய்துவரும் தமிழ்த் தொண்டு கள் மிகப்பலவாகும். இவர்கள் செய்துவரும் தொண் டினை அறிந்து அதற்கு உறுதுணையாயிருந்து போற்று வது தமிழ் மக்கள் ஒவ்வொருவரின் கடமையாகும். எல் லாம் வல்ல இறைவன் இவர்கட்குச் செல்வத்தையும் நோயற்ற யாக்கையினையும் தந்து நெடுங்காலம் வாழச் செய்வானாக.

இங்ஙனம்,

திரு. அடிகளாசிரியர்.

# செய்யுள் இலக்கணம்.

## பாயிரம்.

மலர்தலை யுலகிற் பலகலை யுணர்த்திய
ஆசா னிணையடி அன்பொடு பரவிச்
செய்யுள் இலக்கணம் செப்புவன் நன்கே. 1

### செய்யுள் இன்னதென்பது

செய்யுள் தானே,
அறமுதல் நான்கினும் நெறிபெற விளங்கி
எழுத்தசை சீர்தளை அடிதொடை எனுமா
றுறுப்பொடும் பொருந்திப் பாவே பாவினம்
எனவிரு பாற்றாய் அணிபெற வியலும். 2

## 1. எழுத்தியல்.

### எழுத்தின்னதென்பதும் அதன் வகையும்

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே. 3

---

1 ஆசான்—செந்தமிழ்ப் பரமாசிரியன். செய்யுள்—இயற்றமிழ்ச் செய்யுட்களாகிய பாவும் பாவினமும். இந்நூற்பா நுதலிப்புகுதலென்னும் உத்தி.

2 ஏகாரம் பிரிநிலை. இசை. நாடகங்களை விலக்கி இயற்றமிழ் யாப்பினை உணர்த்தலின்; நெறி—பத்தியம். கத்தியம் முதலாய ஆரிய மரபினை நீக்கித் தமிழ் மரபை உணர்த்தும்; பாற்றாய்—பகுதியாகி. இந்நூற்பா தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தி.

3 அணுத்திரள்—செவிப்புலனும் ஒலித்திரள்; முதல் சார்பெழுத்துக்களின் இயல்பினை நன்னூலுட் காண்க. இது மேற்கோள்.

### அசைக்குறுப்பாம் எழுத்துக்கள்

அவற்றுள்.
குறில்நெடில் உயிருறுப் புயிர்மெய் ஆய்தம்
குறுகியல் இஉ ஐயீ ரளபெடை
எனும்பதி ஞென்றும் அசைக்குறுப் பென்ப. 4

### சிலவற்றிற்குச் சிறப்புவிதி

ஆவியொ டுயிர்மெய் அலகிடப் பெறுமே. 5

தனிநிலை அலகொடு தழுவலு முரித்தே. 6

---

4 குறில். நெடில் — உயிராயும் உயிர்மெய்யாயும் வருவன; ஆவி — உயிர்; மெய்—மூவினமாய பதினெட்டு மெய்கள்; உயிர்மெய் — உயிரும் மெய்யும் கூடிய 216; குறுகிய இ, உ, ஐ — குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம்; ஈரளபெடை—உயிர்அளபெடை, ஒற்றளபெடை 'எனும்' பதி ஞென்றும் என்பதனுல் சிறப்பில்லா ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் ஆய்தக் குறுக்கம் முதலாயவை கொள்க.

5 அலகிடுதல், அசையாகவும் அசைக் குறுப்பாகவும் எழுத்துக்களை எண்ணி அளவிடுதல்; ஒற்றுக்கள் அளபெழுந்தாலன்றி எண்ணப் பெரு. இஃது உரைத்துமென்னும் உத்தி,

(உ-ம்) கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்ரு டொழாஅ ரெனின். இதனுள் ஒற்று நீக்கி 21 எழுத்துக்கள் உள்ளமை காண்க. அங்ங் கனிந்த அருளுடையார்க்கன்பு செய்து
நங்ங் களங்கறுப்பாம் நாம் — இதனுள் 'ங்' அளபெடை சேர்ந்து 22 எழுத்துள.

6 தனிநிலை—ஆய்த எழுத்து. உம்மை எதிர்மறையாகலின் தழுவப்படாமை பெரும்பான்மை என்க. (உ-ம்) அற்ருல் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்ருன் நெடிதுய்க்கு மாறு — ஆய்தம் எண்ணப்பெற்று நிரையசையாயிற்று.

(உ-ம்) தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் ருேன்ருமை நன்று. ஆய்தம் எண்ணப்பெருமல் நேரசையாயிற்று.

எழுத்தல் ஓசையும் இயையும் ஒரோவழி. 7

சிதையிற் சீர்தளை சிறியஇ உவ்வோ
டுயிரள பெடையும் இயலா அலகு; ஐக்
குற்றுயிர் இயல்பினைக் கொள்ளும் என்ப. 8

---

7 எழுத்தல் ஓசை—முற்கு, வீளை, இலதை முதலாய எழுத்தல்லாத ஒலிகள். (உ-ம்) ''மன்றலங் கொன்றை மலர்மிலைந்துஃவஃஃகென்று திரியும்'' என்னும் பாடலுள் உஃவஃஃ என்பன எழுத்தல்லாத ஓசைகள். அலகு பெற்றன. ஒரோவழி—சிலவிடத்து எழுத்தல் ஓசையும் என்ற உம்மையால்—எழுத்துள்ள ஓசை இடைச் சொல்லாய் அலகுபெறும்.

(உ-ம்) உண்டுண் டுண் டென்னும் உணர்விஞற் சாற்றுமே
டொண்டொண் டொடென்னும் பறை. (நாலடி—25)
கலகல, கூஉந் துணையல்லால் (நாலடியார்—130)

8 சிதையின் சீர்தளை—சீருந் தளையும் கெடுமிடங்களில். சிறிய இ, உ—குற்றியலிகரம், குற்றியலுகரம். ஓடு-எண்ணெடு. இயலா அலகு—எண்ணப்பெரு. ஐ—ஐகாரமாகிய நெட்டெழுத்து. குற்றுயிர் இயல்பினைக் கொள்ளும்—குற்றெழுத்துப்போல முன்வரும் குறிலோடும் நெடிலோடும் கூடி நிரையசையாம். சிதையாவிடின் — முன்னவை அலகிடப்பெறும். ஐகாரம் நெட்டெழுத்துப்போல நின்று நேரசையாம்.

(உ-ம்) அருளல்ல தியாதெனின் கொல்லாமை; குற்றியலிகரம் அலகு பெருமை காண்க. பெறின் கலித்தளையாகி வெண்பாக் கெடும்.

கொன்று கோடு நீடு குருதி பாயவும். இக்குற்றியலுகரங்கள் அலகு பெரு. பெறின் ஆறசைச் சீராகிக் குற்றப்படும்.

வீழப் படுவார் கெழீஇ யிலர் தாம்வீழ்வார்

வீழப் படாஅ ரெனின். இதனுள் கெழீஇ யிலர் என்பதனுள் அளபெடை எண்ணப் பெருமை காண்க. பெறின் வஞ்சித் தளையாம். படாஅர் என அலகு பெற்றமையும் காண்க.

''வந்துநீ சேரின் உயிர்வாழும் வாராக்கால்

முந்தியாய் பெய்த வளைகழலும்''—இதனுள் குற்றுகரமும் குற்றிகரமும் அலகு பெற்றமை காண்க.

அன்னையை யான் நோவ தவமால் அணியிழாய்

புன்னையை யான் நோவன் புலந்து—ஐகாரம் குறில்போல நின்றமை காண்க.

'வைகலும் வைகல் வரக்கண்டும்' இதனுள் நெடிலாயே நின்றமை காண்க. கொள்ளும் என்றதனல் மொழிமுதல் ஔகாரத்திற்கும் இவ்விதி கொள்க.

## 2. அசையியல்.

[அசையின்னதென்பதும் அதன் வகையும்]

எழுமொலி யளவாய் எழுத்தினி லியன்றுங்.
கொழுகிய சீருறுப் பாமசை யதுநேர்
நிரையென இரண்டாய் இயங்கும் என்ப. 9

ஈரசையும் ஆமாறு

குறிலும் நெடிலும் தனித்தும் ஒற்றடுத்தும்
குறிலிணை குறினெடில் இணைந்தும் ஒற்றடுத்தும்
வரினவை நிரலே நேர், நிரை, யசையாம். 10

சிறப்பு விதி

மொழிமுதல் தனிக்குறில் முறையின்விட் டிசைப்பின்
நேரசை யாம்நெடில் அளபெழின் நேர்நேர்
குறிலொடு கூடின் கூறிய நிரைநேர்
ஒற்றள பாய்விடின் ஓரசை யாமவை
முன்னும் பின்னும் முயங்குத லிலவே. 11

---

9 அசை-சீருக்கு உறுப்பாக இணங்கி நிற்றல். 'ஒழுகிய' என்றதனால் சீருக்கு உறுப்பாதலே யன்றி ஒரோவழி அசையே சீராகி நிற்குமென்றறிக. இயங்கும் என்றதனால் இவற்றோடு நேர்பு, நிரைபு என வேறிரண்டு அசை கொண் டாரும் உளர் என அறிக. (உ-ம்) காசு, பிறப்பு

10 (உ-ம்) கா, வி, கால், வில்—இவை நேரசை. கவி, கனு, கடல், வரால் — இவை நிரையசை.

11 மொழி—ஈண்டுச்சீரை யுணர்த்தும். முறை என்றதனன் ஏவல், குறிப்பு, தற்சுட்டு, வினு, சுட்டு என்ற இவ்வைந்து பொருட்கண்ணும் விட்டிசைத்து நிற்கும் தனிக்குறில் நேரசையாகும்—அல்லாத இடத்து முன்வரும் குறில் அன்றி நெடிலோடு கூடி நிரையசையாம். (உ-ம்) அஆ! இழந்தானென் றெண்ணப்படும். நெடில்—தனி நெடிலும் உயிர்மெய் நெடிலும்.

(உ-ம்) ஏஎர் சிதைய அழாஅல் எழாஅனின்
சேயரி சிந்தின கண்

கூறிய என்பதனல் ''செருஅஅய் வாழிய நெஞ்சு'' என நான்கு மாத்திரை அளபெழினும் தனித்தனி நேரசையாமென அறிக.
ஒற்றளபு — ஙஞண நமன வயவள ஆய்தம் இப்பதினொன்றும் அளபெழும்.

(உ-ம்) அங்ங் கனிந்த அருளிடத்தார்க் கன்புசெய்து
நங்ங் களங்கறுப்பாம் நாம்
எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு. முயங்குதல்—கூடுதல்.

## 3. சீரியல்.

### சீர் இன்னதென்பதும் அதன்வகையும் விரியும்

அடிக்குறுப் பாஞ்சீர் அசையின் ஞகும்
ஐவகை யாமதன் விரிமுப் பஃதே. 12

### பெயரும் உரிமையும்

ஈரசை நாற்சீர் அகவற் குரிய. 13

மூவசை எட்டுள் நேரிறு நான்கும்
வெள்ளை, மற்றவை வஞ்சிக்குரிய. 14

ஒள்ளிய நாலசைச் சீர்பதி ஞறும்
வெள்ளையுள் வாராப் பொதுச்சீர் என்ப. 15

---

12 சீர்—தாள அறுதியை உடையது, தொல்லாசிரியருள் பிறவாறும் சீர் வகுத்தார் உளராதலின் முப்பது என ஒருதலைமொழிதலாயிற்று. ஐவகையும் பின்னர் உடம்பொடு புணர்த்தலாற் கூறப்படும்.

13 அகவற்குரிய—அகவற்சீர் என்னும் பெயர்க்குரியவாம்.
அவை: நேர் நேர் நிரை நேர் நிரை நிரை நேர் நிரை
(உ ம்) சங்கம் புரந்தோர் தமிழக மன்னவர்

14 வெள்ளை—வெண்பா—வெண்பா உரிச்சீர் எனப் பெயர்பெறும்.
வஞ்சி—வஞ்சியுரிச்சீர் எனப் பெயர் பெறும். முற்கூறிய நான்கு அகவற் சீரோடு நேர், நிரை என்பனவற்றைத் தனித்தனி கூட்ட நேராய் முடிவன நான்கு; நிரையாய் முடிவன நான்கு; ஆக மூவசைச் சீர்கள் எட்டாயினமை காண்க (உ-ம்) சங்கத்தைப் புரந்தோர்கள் தமிழகத்தின் மன்னவரே
சங்கத்தினைப் புரந்தோரெவர் தமிழகத்துயர் மன்னவரலால்

15 ஒள்ளிய—செம்மையான. வெள்ளையுள்வாரா எனவே நேரீற்று நாலசைச் சீர் எட்டும் ஆசிரியப்பா, கலிப்பா, பாவினங்களுள் சிறுபான்மை ஓரடியுள் ஒன்று குற்றுகர இறுதியாகி வரும். வஞ்சிப்பாவிற் பயின்று வரும். நிரையீற்று நாலசைச்சீர் எட்டும் வஞ்சிப்பாவில் மட்டும் வரும் என அறிக. பொது என்பது சிறப்பின்மையை விளக்கி நின்றது.

நேர்நிரை இரண்டும் சீர்நிலை அருகும். 16

வாய்பாடுகள்

தேமா புளிமா கருவிளம் கூவிளம்
அகவற் குரிய, அந்தங் காய்பெறின்
வெள்ளைக் குரிய, கனிபெறின் வஞ்சி,
தண்பூ நறும்பூ தண்ணிழல் நறுநிழல்
பெறினவை பொதுச்சீர், நாள்மலர் அசைச்சீர்க்
குரியவாய் பாடென ஓதினர் புலவர். 17

## 4. தளையியல்.

தளையின்னதென்பதும் அதன் விரியும்

நிலைச்சீ ரிறுதியும் வருசீர் முதலும்
தலைப்பெயல் தளையஃ தேழென மொழிப. 18

---

16 நேர்—நேரசை. நிரை—நிரையசை. அருகும்—சிறுபான்மையாக வரும். வெண்பாவின் இறுதிச் சீராகவும் வஞ்சிப்பாவுள் கூனாகவும் பாவினத்துள் அருகியும் வரும்.

17 தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் இவை நான்கினோடும் தனித்தனி 'காய்' என்ற நேரசை வாய்பாடு கூட வெண்சீரும், கனி என்ற நிரையசை வாய் பாடு கூட வஞ்சியுரிச்சீரும், தண்பூ, நறும்பூ என்ற இரண்டசை வாய்பாடு கூட நேரீற்றுப் பொதுச்சீர் எட்டும், தண்ணிழல், நறுநிழல் என்ற இரண்டசை வாய்பாடு கூட நிரையீற்றுப் பொதுச்சீர் எட்டும் உண்டாகும். நாள், மலர் இவை அசைச்சீர்

'உரிய' என்பதனை வஞ்சி என்பதனோடும் பொதுச்சீர் என்பதனோடும் 'வாய்பா'டென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. பிறவாறும் வாய்பாடு கூறுப.

18 தளை - கட்டு. இயைபு. நிலைச்சீர் — வருஞ்சீர்க்கு முன்னிற்பது. தலைப் பெயல் - கூடுதல் இறுதி, முதல் என்பன ஆண்டுள்ள ஆசைகளைக் குறிக் கும். ஏழின்பெயர் வரும் நூற்பாக்களில் உடம்பொடு புணர்த்துக் கூறப் பெறும்.

### தளை வருமாறும் அவற்றின் பெயரும்

இயற்சீர் இயைதல் ஆசிரி யத்தளை
அச்சீர் முரணல் இயற்சீர் வெண்டளை
அசைச்சீர் இவ்வியல் ஆகும் என்ப. 19

வெண்சீர் ஒன்றுதல் வெண்டளை, மறுதலைக்
கலித்தளை, பூச்சீர் கலக்குமிவ் வியல்பே. 20

கனிச்சீர் ஒன்றினும் மாறினும் வஞ்சித்
தளையாம், நிழற்சீர் இவ்வியல் பெறுமே. 21

---

19 இயைதல்—பொருந்துதல் ; எனவே நேரீற்றியற்சீர் நின்று வருஞ்சீர் முதல் நேரசையோடு ஒன்றுவது நேரொன்றாசிரியத்தளை. நிரையீற்றியற்சீர் நின்று அவ்வாறே நிரையோடு ஒன்றுவது நிரையொன்றாசிரியத்தளை. முரணல்—மாறுபடுதல் அஃதாவது நேர்முன் நிரை வருவதும் நிரைமுன் நேர் வருவதும் ஆம. (உ-ம்) (1) கற்கை+நன்றே (2 நாடொறும்+பயிலுக. (3) கற்க+கசடறக்+கற்பவை+கற்றபின் இவ்வியல்—ஆசிரிய உரிச்சீர் கொள்ளும் இம்மூவகைத் தளை இயல்புகள். ஆகும்—ஒக்கும். (உ-ம்) உரிமையின்+கண் + இன்மையால் அரிமதர்+மழைக்+கண்ணாள் பெருமை கொன்ற என்பவே,

20 வெண்சீர் ஒன்றுதல்—வெண்பா உரிச்சீர் நின்று வருஞ்சீர் முதல் நேரசை வர ஒன்றுவது. இது வெண்சீர் வெண்டளை (உ-ம்) யாதானும் நாடாமால் ஊராமால். மறுதலை—மாறுபாடு. அஃதாவது வெண்சீர் நிற்க வருஞ்சீர் முதல் நிரை யசையாக வருதல். இது கலித்தளை. (உ-ம்) செல்வப்போர்+கதக் கண்ணன். பூச்சீர்:— நேரீற்றுப் பொதுச்சீர் எட்டும் ஒன்றுவது வெண்சீர் வெண்டளை.

ஒன்றாதது கலித்தளை என்பதாம். கலக்கும்—ஒக்கும். இதனால் பூச்சீரால் வரும் வெண்டளை வெண்பாவினுள் வாராதெனக் கொள்க.

21 கனிச்சீர்—வஞ்சியுரிச்சீர். ஒன்றினும் — வருஞ்சீர் முதல் நிரையசையாகப் பொருந்தினும். மாறினும்—வருஞ்சீர் முதல் நேரசையாக வந்து மாறி நிற்பினும் வஞ்சித் தளையாம். இவை முறையே ஒன்றிய வஞ்சித்தளையென்றும் ஒன்றாத வஞ்சித்தளை என்றும் வழங்கப்பெறும். (உ-ம்) (1) செந்தாமரை+அழகொளிரும். (2) திருமுகத்தவன்+செங்கண்மால், நிழற்சீர்-நிரையீற்றுப் பொதுச்சீர் எட்டும் இவ்வாறே ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாகவும் ஒன்றாதது ஒன்றாத வஞ்சித்தளையாகவும் கொள்ளப்படும்.

## 5. அடியியல்.

### அடியின்னதென்பதும் அதன் வகையும்

தொடையுறுப் பாகச் சீரி னியறல்
அடியின் இயல்பஃ தைவகைத் தாகும். 22

### பெயரும் அவைவருமாறும்

இருசீர் முச்சீர் குறள்சிந் தடியே
நாற்சீர் ஐஞ்சீர் நேர், நெடிலடியே
ஐஞ்சீ ரிகத்தல் கழிநெடி லென்ப. 23

### பாக்களுக்குரிய அடிகளின் சிறுமை பெருமை

வெள்ளைக் கிரண்டடி கலிக்கீ ரிரண்டாம்
அகவலொடு வஞ்சிக் கடிமூன் றிழிபே,
உரைப்போர் கருத்தள வுயர்வெனப் படுமே. 24

---

22 அடி—சீர்களை அடுத்துவருதலின் அடி எனப்பட்டது.
'ஆகும்' என்பதனால் தனிச்சீரைச் சொற்சீரடி என்று வழங்கவும் பெறுமெனக் கொள்க. ஐவகையும் பின்னர் உடம்பொடு புணர்த்துக்கூறப்பெறும்.

23 இருசீர் கொண்டது குறளடி. முச்சீர்கொண்டது சிந்தடி நாற்சீர்கொண்டது அளவடி அல்லது நேரடி. ஐஞ்சீர் கொண்டது நெடிலடி. அறுசீரும் அதற்கு மேலும் கொண்டவை கழிநெடிலடி ஆகும். முதல் இரண்டடியும் நிரல்நிறை. நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே (தொல்-செய்—31) என்பதனால் நாற்சீரடியை அளவடியாகக்கொண்டு அதனிற்குறைந்தவற்றை சிந்தடி அளவடி என்றும் மிக்கவற்றை நெடிலடி கழிநெடிலடி என்றும் பகுத்தார்.

24 விளங்கவைத்தல் என்னும் அழகுபற்றி இவ்விலக்கணம் ஈண்டுக் கூறப்பெற்றது, வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி எனக் கூருது தலைதடுமாற்றமாகக் கூறியதால் வஞ்சிப்பா இரண்டடியாகவும் ஆசிரியப்பா இரண்டிச் சுரிதமாகவும் சிறுபான்மையாகி வரும் எனக்கொள்வர் ஒரு சாரார் என அறிக, இழிபு—சிற்றெல்லை. உயர்வு—பேரெல்லை.

## 6. தொடையியல்.

### தொடையின்னதென்பதும், வகையும் விரியும்

அடியுட னடியைத் தொடுத்தலும் அழகுற
அடியினிற் சீரினை அமைத்தலும் முறையே
தொடையும் தொடையின் விகற்பமு மாமவை
எட்டுடன் ஏழைந் தாகிநன் கியலும். 25

### தொடைகளின் இயல்பு

முதலெழுத் தியையின் மோனை, அடிதோ
றீற்றெழுத் தியைபிரண் டாமெழுத் தெதுகை
மொழி,பொருள் முரணுதல் முரண் முதற்சீர்தொறும்
அளபெழின் அளபெடை, அந்தம் முதலா
வரினந் தாதி, வந்தவம் மொழியே
அடிமுழு தும்வரின் இரட்டை, அவைதாம்
சேருத லில்லது செந்தொடை நாமம்
பெறுமிவை எட்டும் தொடையென மொழிப. 26

---

25 தொடை—ஒன்றோடொன்று தொடுக்கப்பெறுதலின் தொடை எனப்பட்டது. அழகு—ஓசை நயம். அழகுற என்றதனால் இனம் முதலிய எழுத்துக்களால் வரும் தொடைகள் சிறப்பில என்க. நன்கு இயலும் எனவே நன்கு இயலாத்தொடைகளும் தொடைவிகற்பங்களும் உளவென அறிக. ஏழைந்து—முப்பத்தைந்து. இவற்றின் பெயரும் இயலும் வரும் நூற்பாக்களுள் காண்க. தொடை என்பது ஒரு செய்யுளில் அடிதோறும் அமைந்துவருவது. தொடை விகற்பம் என்பது ஓரடியுள் சீர்தோறும் அமைந்துவருவது.

26 ஆம் என்றதனால் இரண்டாமெழுத்து ஒன்றி வருதலோடு முதல் எழுத்தும் அளவொத்து வருதலாம். இயைபுத் தொடைக்கு எழுத்தேயன்றி அசையும் சீரும் ஒன்றி வருதலும் ஆம். இருவகை அளபெடைகளும் நால்வகை அந்தாதிகளும் கொள்க. அவைதாம்—மேற்கூறிய எழுவகைத் தொடை இயல்புகள் 'தாம்' என்பதனால் இரட்டைத் தொடையுள் இறுதிச் சீர் ஈற்றெழுத்து ஒன்று குறையினும் இழுக்காது என்றும் செந்தொடையுள் சீருந்தளையும் மாறுபட வருதல் சிறப்புடைத்தென்றும் கொள்க. நாமம் என்றதனால் அசையும் சீரும் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பது சிறப்புடைத்து. இனமோனை முதலிய பெறும் செந்தொடை மருட்செந்தொடை ஆம் எனவும் கொள்க. எட்டும் என்ற உம்மை இழிவு சிறப்பாய் இறுதி மூன்று தொடைகளும் சிறப்பில என்பதைக் காட்டும். சீர்தொறும் என்பதனை மோனை-எதுகை முரண்-அளபெடை எனும் நான்கனோடும் கூட்டுக.

### தொடை விகற்பங்களினியல்பு

இருமுதற் சீர்மிசை இணை,பொழிப் பிடையிட்
டிருசீ ரிடையிட் டொரூஉவாம், ஈறிலி
கூழை, முதலிறு வாயல் குறைந்தன
மேல்கீழ்க் கதுவாய் மேவிய நாற்சீர்
முழுவதும் ஒன்றின் முற்றும் ஏழும்
மோனை முதலா ஐந்தொடை பெறுமே. 27

### சிறப்புவிதி

எதுகை மோனைக் கினவெழுத் திழுக்கார். 28

---

27 இருமுதற்சீர் மிசை—முதல் இரண்டு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது இணை. இடையிட்டு—இடையிடையின்றி. முதற்சீர்க் கண்ணும் மூன்றாஞ்சீர்க்கண்ணும் வருவது பொழிப்பு. முதற்சீர்க்கண்ணும் நான்காம் சீர்க்கண்ணும் வருவது ஒரூஉ. முதல் மூன்று சீர்க்கண்ணும் வருவது கூழை. முதலயற் சீர்க்கண்ணின்றி ஏனை மூன்று சீர்க்கண்ணும் வருவது மேற்கதுவாய். ஈற்றயற்சீர்க்கண்ணின்றி ஏனைய மூன்று சீர்க்கண் ணும் வருவது கீழ்க்கதுவாய். முதலிறுவாயயல் குறைந்தன மேல் கீழ்க் கதுவாய் என்பது நிரனிறை. நாற்சீர்க்கண்ணும் வருவது முற்று "மேவிய" என்றதனால் இத்தொடை விகற்பங்கள் ஏழும் அளவடிக்கண்ணே வழங்கப் பெறும் என்றும், இயைபுத் தொடை விகற்பங்களுக்கு ஈற்றுச்சீரே முதற் சீராகக்கொண்டு வழங்கப்பெறும் என்றும் கொள்க. மோனை முதலா ஐந்து— மோனை இயைபு எதுகை முரண் அளபெடை ஆய இவை.

28 இனவெழுத்தென்பன, அ ஆ ஐ ஔ | இ ஈ எ ஏ | உ ஊ ஒ ஓ. இவை உயிர் உயிர்மெய்களுள் இனமாகும். த ச | ஞ ந | ம வ | இவை மெய்யுள் இனமாம். எதுகை மோனைக் கிழுக்கார் எனவே இயைபுக்கு இழுக்காம் என அறிக. மோனை எதுகை என்னாமையால் வருக்கம், நெடில், இனம் பற்றிவரும் எதுகைமோனைகளும் தலையிடைகடை என்ற சிறப்புக்களும் உயிரெதுகை, உயிர்மோனை. ஆசெதுகை, இடையிட்டெதுகை, மூன்றா மெழுத்தொன்றெதுகை முதலிய விகற்பங்களும் நாற்சீரின் மிக்கும் குறைந் தும் வரும் அடிகளில் காணும் வழியெதுகை, வழி மோனை, வழி முரண் என்பனவும் பிறவும் கொள்க. (உ-ம். யாப்பருங் கலத்துட் காண்க)

### வேறு சில தொடை விகற்பங்கள்

கடையே கடையிணை பின் கடைக் கூழையொ
டிடைப்புணர் வென்பவும் இயம்புந ருளரே. 29

## 7. பாவியல்.

### பா இன்னதென்பது

கூறிய உறுப்பிற் குறைபா டின்றி
நேரிய இசையொடு நிகழ்வது பாவே. 30

### பாவகை

வெண்பா ஆசிரியங் கலியே வஞ்சியொ
டின்னிசை மருட்பா வெனப்பா வைந்தே. 31

---

29 கடை—இறுதிச்சீர்க்கண் வருதல். கடையிணை—இறுதி இரண்டு சீர்க்கண்ணும் வருதல். பின்—இரண்டாம் சீர்க்கண்ணும் நான்காம் சீர்க்கண்ணும் வருதல் கடைக்கூழை—இறுதி மூன்று சீர்க்கண்ணும் வருதல். இடைப்புணர்—இடையிரண்டு சீர்க்கண் வருதல். இவை பெரும்பாலும் முரண் தொடைக்கே சிறப்புடையன. பிறவற்றிற்கும் ஆம். ஆயினும் இவை சிறப்பில்லாதனவாம்.

30 உறுப்பு; எழுத்து அசை சீர் தளை அடிதொடை என்பன. கூறிய உறுப்பெனவே கூறப்பெரு உறுப்புகளும் உள. அவற்றைத் தொல்காப்பியத்துட் காண்க. குறைபாடின்றி எனவே தொடையும் தொடை விகற்பங்களும் குன்றி வரவும் பெறுமென்க. இசை—ஓசை. இதனைப் பாவென்னும் உறுப்பென்பர். நேரிய இசை எனவே தூக்கு முதலிய இசைகளானும் பண்ணொடு கூட்டியும் பாடப்பெறுமென்க.

31 இன்னிசை என்றதனுல் மருட்பா நான்கு பொருள்மீது வரும் என்பதும் இனம் பெருதென்பதும் கொள்க. ஏகாரம் தேற்றம். தமிழ் மரபுக்கு மாருகக் குறள்—சிந்து. திரிபாதி வெண்பா—திலதம்—விருத்தம்—சவலை எனவும் இவற்றின் போலி எனவும் பதினொன்கு வகையாகப் பகுப்பாருமுளர் எனவறிக.

## வெண்பா

### வெண்பாவின் பொதுவிலக்கணம்

ஓரசைச் சீருமொண் காசும் பிறப்பும்
இற்றசிந் தடியே ஈற்றடி ஏனைய
நேரடி யாகவும் நிறைவமை செப்பல்.
இசையுடன் வெண்சீர் இயற்சீர் தன்றளை
இயந்நமை விகற்பொடும் இயல்வது வெண்பா. 32

### வெண்பாவின் விரி

அதுவே.
குறளே நேரிசை இன்னிசை சிந்தியல்
பஃறொடை எனவைந் தாமெனப் பகர்ப, 33

### குறள் வெண்பா

அவற்றுள்,
ஈரடி வெண்பாக் குறளென விசைப்ப. 34

### நேரிசை வெண்பா

குறளிரண் டியைந்ததன் இடையினிற் குறைவகல்
நெறிபெறு தனிச்சொலின் நிறைந்தடி முடிந்தொரு
விகற்பினும் இரண்டினும் விளங்குதல் நேரிசை. 35

---

32 ஒண்காசும் பிறப்பும் என்றதனுல் முற்றியலுகர இறுதியும் கொள்க. ஏனைய என்பது குறட்பாவிற்குப் பொருந்தாதாயினும் மிகுதி பற்றிக் கொள்க. 'நிறைவமை' என்றதனுல் ஏந்திசை, தூங்கிசை, ஒழுகிசை, எனச் செப்பலோசை முத்திறப்படுமென அறிக. அமைவிகற்பம் என்றது நேரிசை இன்னிசை பிரிவு கருதி.

33 ஏகாரம் எண்ணேகாரம். ஐந்தாம் என்றதனுல்—சவலை முதலான பகுப்புகள் சிறப்பிலவென்க.

34 இதுவும் ஒரு விகற்பானும் இரு விகற்பானும் வரும்.

35 குறைவகல் என்றதனுன் முதற்சீரோடொத்த எதுகைத்தாய் வரும். நெறி பெறுதலாவது முதற் குறட்பா அமைப்பிலுள்ள இறுதிச்சீரோடு ,தனிச் சொல், சீரோதளையோ ஒன்ருவிடின் ஒன்றே இரண்டோ அசைகூட்டி

### இன்னிசை வெண்பா

ஈரரிண் டடியாய்த் தனிச்சொல் லில்லா
தொன்றும் பலவும் விகற்பொடு முடிநவும்
நேரிசை வெள்ளையில் நேரா தியன்றவும்
இன்னிசை வெண்பா என்மனார் புலவர். 36

### சிந்தியல் வெண்பாக்கள்

நேரிசை இன்னிசை வெள்ளையின் நடந்து
மூவடி யானிறின் நேரிசை இன்னிசைச்
சிந்திய லாமெனச் செப்புவர் புலவர். 37

### பஃறொடை வெண்பா

பலவடி நடையின பஃறொடை என்ப. 38

### வெண்பாவிற்குப் புறனடை

**வேற்றடி சீர்தளை வெள்ளையுள் விரவார்.** 39

---

அமைக்கப்பெறும். இவற்றை ஆசிடை நேரிசை வெண்பாவென்றும் ஆசின்றி அமைவது இரு குறள் நேரிசை வெண்பாவென்றும் வழங்கும். இன்னும் குறைவகல் என்பதனான் செப்பலோசை வழுவி வரும் நேரிசை இன்னிசை வெண்பாக்களை வெண்டுறையின் பாற்படுத்து வழங்கப்பெறுமென்க.

36 நேரிசை வெண்பாவின் வேறுபட வருவன யாவும் இன்னிசையாம்.

37 வெள்ளையின் என்றதனுள் 'இன்' உவம உருபு. எனவே நேரிசைச் சிந்தியல்—இன்னிசைச் சிந்தியல் என இரண்டாயிற்று.

38 ஒன்றல்லனவெல்லாம் பலவாயினும் நான்கடி வரையும் இலக்கணம் அமைத்தமையால் ஐந்தடி முதலாக வருவன பஃறொடை என உய்த்துணர்க. "நடையின" என்றதனால் செப்பலோசையிற் சிதைந்த பஃறொடை வெண்பா வெண்கலிப்பாவின் பாற்படும்.

39 வெள்ளையுள் விரவார் எனவே அகவல், கலி, வஞ்சிப்பாக்களுள். வேற்றுச் சீருந் தளையும் விரவி வரும் என்றும் அகவலுள்ளும் கலியினுள்ளும் நெடிலடி அருகி வருமென்றுங் கொள்க. அடி முற்கூறியது ஓசையின்பம் கருதி.

## ஆசிரியப்பா.

### ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணம்

இயற்சீர் தன் றளை இயந்தும் அயலவை
அருகியும் **அணிசேர் அகவல்** ஓசையின்
அளவடி யொடுவரல் ஆசிரி யம்மே. 40

### ஆசிரியப்பாவின் விரி

அதுவே,
நேரிசை இணைக்குறள் நிலைமண் டிலமே
அடிமறி மண்டில மெனநால் வகைத்தே 41

### நேரிசை ஆசிரியப்பா

அவற்றுள்,
ஈற்றயல் சிந்தடி யாய்வரல் நேரிசை. 42

### இணைக்குறளாசிரியப்பா

இடையிடை குறளடி சிந்தடி பயின்று
நடைபெறு மிணைக்குறள் ஆசிரியம்மே. 43

### நிலைமண்டில ஆசிரியப்பா

அடியள வொப்பது நிலைமண் டிலமே. 44

### அடிமறிமண்டில ஆசிரியப்பா

முதலிடை கடையென முறையுறு மடிகள்
நிலைபிறழ்ந் திசைப்பினும் பொருள்நிலை திரியா
தமைவன அடிமறி மண்டில மாகும். 45

---

40 அணிசேர் என்றதனுல் அகவலோசையும் ஏந்திசை பிரிந்திசை ஒழுகிசை என முத்திறப்படுமென அறிக. ஒடு—கருவிப் பொருட்டு

43 நடைபெறுமென்றதனுல் நெடிலடியும் அருகி வரும்.

45 முறையுறுமென்றதனுல் அடிதோறும் பொருள் முடிந்து நிற்குமென அறிக. நிலவியும்—மிக்கும். அருகியும்—குறைந்தும்.

## கலிப்பா.

### கலிப்பாவின் பொது இலக்கணம்

நிரைமுதல் வெண்சீர் நிலவியும் தன்றளை
விரவியும் அயற்சீர் அயற்றளை அருகியும்
ஓங்கிய துள்ளல் ஓசையின் நேரடி
தாங்கிய இயல்பின் தரவே தாழிசை
அம்போ தரங்கம் அராகம் தனிச்சொல்
சுரிதக மெனுமா றுறுப்போடும் தோன்றி
நெறிபெறுங் கலிப்பா வருமென மொழிப, 46

### கலியின் வகை

ஒத்தா ழிசைக்கலி வெண்கலி கொச்சகக்
கலியென மூவகைத் தாகும் அதுவே, 47

### அவற்றின் விரி

அவற்றுள்,
ஒத்தா ழிசையே
நேரிசை அம்போ தரங்கம் வண்ணகம்
என்றும், வெண்கலி கலிவெண் பாவெண்
கலிப்பா என்றும், கொச்சகக் கலிதான்
தரவே தரவிணை சிலபல தாழிசை
மயங்கிசை என்றும் வியங்கொள வருமே. 48

---

46 ஓங்கிய என்ற மிகையால் ஏந்திசை, அகவல், பிரிந்திசை, எனத் துள்ளலோசை முத்திறப்படுமெனக்கொள்க. தாங்கிய இயல்பென்றதனுல் தரவு, தாழிசையல்லா உறுப்புக்கள் நேரடியிற் பிறழ்ந்தும் வருமென அறிக. உறுப்பொடும் என்ற உம்மையால் அவ்வுறுப்புக்கள் குறைந்தும் பிறழ்ந்தும் வருமெனக் கொள்க: நெறிபெறு மென்றதனுல் கலிப்பாவின் விகற்பங்கள் யாவும் அறிந்தமைத்துக்கொள்ளப்படும். சில பல தாழிசை—சிஃருழிசை, பஃருழிசை. வியங்கொளவரும்—பெயரிட் டழைக்க வரும்.

### நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

அவற்றுள்,
தரவொன் ருகித் தாழிசை மூன்ருரு
தனிச்சொற் சுரிதகம் எனுநான் குறுப்பொடும்
நிகழ்வது நேரிசை ஒத்தா ழிசையே. 49

### அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

அசையடி கூன்முன் அமைந்தைந் துறுப்பொடும்
இசைவதை யம்போ தரங்கம் என்ப. 50

### வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

அசையடி முன்னர் அராகம் வந்தா
றுறுப்பொடும் வண்ணகம் வருமென உரைப்ப. 51

### கலிவெண்பா

வெண்டளை விரவிச் சிந்தடி முடிவாய்
அகப்பொருள் தழுவி அடிபல வாயிறின்
கலிவெண் பாவெனக் கருதினர் புலவர். 52

### வெண்கலிப்பா

கலித்தளை பயின்றும் கடையடி சிந்தாய்
விடினது வாகும் வெண்கலிப் பாவே. 53

---

49 நிகழ்வதென்றதனல் இந்நான்குறுப்பும் இவ்வரிசை பிறழாது வருமென்க.

50 அதிகார முறைமை என்னும் உத்தியால் ஒத்தாழிசை என்பதனை அம்போதரங்கத்தோடும் பின்வரும் வண்ணகத்தோடும் கூட்டுக. அசையடி — அம்போதரங்கம்:

51 அராகம்—வண்ணகம்.

52 விரவி—மிகுந்து. கருதினர் என்றதனல் வெண்டளையே வந்து அகப்பொருள் தழுவி வருவனவும் கொள்க:

53 ஆகும் என்றதனல் வெண்டளை சிதையாதே—இவ்விரண்டெதுகைத்தாய்த் தனிச்சீர் பெற்றும் வருமெனக் கொள்க.

### தரவு கொச்சகக் கலிப்பா

தரவே தனித்தும் தனிச்சொற் சுரிதகம்
தாங்கியும் வரினவை தரவுகொச் சகமே. 54

### தரவிணைக் கொச்சகக் கலிப்பா

தரவிரண் டாய்வரல் தரவிணை என்ப. 55

### சிஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா

தரவொடு தாழிசை மூன்றவை யிடையிடைத்
தனிச்சொல் விரவிச் சுரிதகத் தாலிறின்
சிஃறு ழிசையெனச் செப்புவர் புலவர். 56

### பஃறுழிசைக் கொச்சகக் கலிப்பா

பலதா ழிசைவரின் பஃறுழிசையே. 57

### மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

கூறிய உறுப்பிற் குறைந்தும் பிறழ்ந்தும்
மாறியும் அதனியல் மயங்கியும் மிக்கும்
வருவன மயங்கிசைக் கொச்சகக் கலியே. 58

---

54 தாங்கியும் என்றதனல் கலியோசை வழுவிவருந் தரவுகொச்சகங்களை கலி விருத்தத்தின்பாற் படுப்பினும் அமையும். தனிச்சொல் சுரிதகங்களைத் தாங்கி வருதலை தரவிணைக் கொச்சகத்திற்கும் கூட்டுக.

57 பிறவற்றிற்கு தாழிசை மூன்று கூறினமையின் பலவென்றது மூன்றின் மிக்கு வருதலை யென்க.

58 ஒருபோகு முதலாயவற்றை மயங்கிசை யென்றே அமைக்க

## கலியுறுப்புக்களின் இயல்

### தரவு தாழிசை

தரவின் சிறுமை மூன்றடி, பெருமை
வரைவிலை தாழிசை இரண்டும் நான்கும்
தரவிற் ருழிசை சுருங்கும் என்ப. 59

### சிறப்பு விதி

அசையடி வண்ணகக் காறே தரவு. 60

### அராகம்

அளவடி முதலா அனைத்தடி யானும்
நான்கடி முதலா எட்டீ ருக
வருவது வண்ணகத் தியல்பென மொழிப. 61

### அம்போதரங்கம்

அளவடி இவ்விரண்டாதலும் நான்காய்
அமைதலும் சிந்தடி இருநான் காதலும்
குறளடி இரட்டலும் குறைதலும் எண்ணியல் 62

### சுரிதகம்

வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
சுரிந்துநின் றிறுதல் சுரிதகம் என்ப, 63

---

59 சிறுமையை இரண்டென்பதனோடும் பெருமையை நான்கென்பதனோடும் கூட்டுக.

60 அசையடி—அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா. வண்ணகம்—வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.

62 இவ்விரண்டு—இரண்டு இரண்டு. இரட்டல்—இரு நான்கே இரட்டிப் பதினாறுதல் குறைதல்—பதினாறு எட்டாதல் உம்மையால் பதினாறுக வருதலே சிறப்புடைத்து எண்—அம்போதரகம்.

63 சுரிந்து நிற்றல்—முடிந்து நிற்றல்.

## வஞ்சிப்பா.

### பொதுவிலக்கணமும் வகையும்

தன்சீர் பொதுச்சீர் தன்றளை பயின்றும்
அயலவை அருகியும் குறளடி யானும்
சிந்தடி யானும் சீரிய தூங்கல்
இசையொடு குறையா வாரத் திறுதல்
வஞ்சியின் மரபென வகுத்தனர் புலவர். 64

## மருட்பா.

### மருட்பாவினியலும் அது பயிலுமிடமும்

வாயுறை புறநிலை வாழ்த்தே கைக்கிளை
செவியறி வுறூஉவெனும் பொருள்மிசை வெண்பா
முதல்வந் தகவல் பின்வரல் மருட்பா. 65

## 8. இனவியல்

### இனமென்றதன் காரணமும் வகையும்

தாழிசை துறையே விருத்தமிம் மூன்றும்
பாவினம் பாவின் பாற்பட் டியலும். 66

### குறள் வெண்செந்துறை

விழுப்பொருள் ஒழுகொலி உற்றடி இரண்டள
வொப்பது குறள்வெண் செந்துறை யாகும் 67

---

64 சீரியதூங்கல் என்றதனால் ஏந்திசை, அகவல் பிரிந்திசைஎனத் தூங்கலோசை முத்திறப்படுமென அறிக; குறையாவாரம்—ஆசிரியச்சுரிதகம்; மரபென்றதனாற் சுரிதகமின்றி வஞ்சிப்பா வாராது என்பதூஉம் பிறபாக்களின் அடிகள் சிறுபான்மைவந்து மயங்கும் என்பதூஉம் உணர்க

65 வாழ்த்தென்பதனை வாயுறையொடுங் கூட்டுக இப்பொருள்கள் பிறபாக்களுக்கும் உரியவாயினும் வஞ்சிப்பாவால் வாழ்த்துதல் மரபன்றென்க.

67 விழுப்பொருள்—சிறந்தபொருள்: ஒழுகொலி தடையின்றி இனிது செல்லும் ஓசை.

### குறள்வெண்டாழிசை

அந்தங் குறைநவும் செந்துறைச் சிதைவும்
சந்தழி குறளும் குறட்டா ழிசையே 68

### வெண்பா இனம்—வெண்டாழிசை

மூன்றடி யாகித் தனித்தும் மூன்றாய்
ஆன்றொரு பொருண்மேல் அடுக்கியும் வெள்ளையின்
இறுமெனின் வெண்டா ழிசையென மொழிப. 69

### வெண்டுறை

மூன்றடி முதலா ஏழடி யளவும்
நின்றுபின் அடிசில் சீர்தப நிற்றலும்
வேற்றொலி விரவலும் வெண்டுறை யாகும். 70

### வெளி விருத்தம்

மூன்றடி யானும் முடிந்தடி தோறும்
தனிச்சொல் வந்து தழுவுதல் விருத்தம். 71

### ஆசிரியப்பா இனம்—ஆசிரியத் தாழிசை

அகவற் றாழிசை அடிமூன் றேத்தும்
இகலில் மூன்றாய் அடுக்கியும் இயலும். 72

---

68 சந்தழி குறள்—சந்தம் அழிந்தகுறள் வெண்பா; அந்தம் இரண்டாமடி. குறைந—குறைந்துவருவன; சிதைவு - இசையாலும் பொருளாலும் சிதைந்துவருவன; தாழிசையைப் பிற்கூறியதனால் குறட்பா விருத்தம் இன்றென்றுணர்க

69 ஆன்று என்றதனால் மூன்றடுக்கி வருதலே சிறப்புடைத்து. சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிவரினும் ஆம் வெள்ளையின்—வெண்பாவின் ஈற்றடிபோல. இறுமெனின்—முடிந்து நின்றால்.

70 சீர்தப—சீர்கள் குறைய. வேற்றொலி—முன்வந்த அடிகளின் ஓசைக்கு மாறுபட்டு வரும் ஓசை, எனவே ஒரொலிவெண்டுறை—வேற்றொலி வெண்டுறை என இவை வழக்கம்பெறும்.

71 உம்மையால் நான்கடியும் கொள்க. தழுவுதல்—ஒரு சொல்லே அடிதோறும் தனிச்சொல்லாகிவரும். அஃது ஐந்தாவது சீராக வருமெனவும் கொள்க.

### ஆசிரியத்துறை

இடையிடை குறைந்தும் எருத்தடி நைந்தும்
இடைமடக் காயும் ஈரிரண் டடியான்
நடைபெறு மாசிரி யத்துறை என்ப. 73

### ஆசிரிய விருத்தம்

கழிநெடி லடிநான் கொப்பது விருத்தம். 74

### கலிப்பா இனம்—கலித்தாழிசை

அடியள வில்லா தொத்தும் தனித்தும்
கடையடி மிகுதல் கலித்தா ழிசையே. 75

### கலித்துறை

நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை 76

### கட்டளைக் கலித்துறை

முதற்சீர் நான்கும் வெண்டளை பெற்றுக்
கடைச்சீர் விளங்கா யாகவும் முதலசை
நேர்பதி னாறேநிரைபதி னேழெழுத்
தடிதொறும் வரினது கட்டளைக் கலித்துறை 77

### கலிவிருத்தம்

அளவடி நான்கின கலிவிருத் தம்மே. 78

---

73 எருத்தடி — ஈற்றயலடி. எருத்தடி நைந்தும் — ஈற்றயலடி குறைந்தும், எருத்தடி நைந்து இடைமடக்காயும், ஈற்றடி குறைந்து இடைமடக்காயும் நால்வகையான் வருமென்க,

75 ஒத்தும் என்பதனால் ஒவ்வாதும் வருமென்க. தனித்தும் என்றதனால் மூன்றடுக்கியும் வருமென்க

77 முதலசை என்பதனை நிரையொடுங்கூட்டுக. ஆகவும் என்றதனால் விளங்காய்ச் சீரேயன்றி எழுத்துக்குறையாமல் பிற மூவசைச் சீர்களும், சிறுபான்மை பூச்சீரும் வருமெனக்கொள்க,

### வஞ்சிப்பா இனம்—வஞ்சித்தாழிசை

குறளடி நான்காய்க் குறையா தொருமூன்
றொருபொருள் மேல்வரின் வஞ்சித் தாழிசை. 79

### வஞ்சித்துறை

குறளடி நான்கே துறையெனக் கூறுப. 80

### வஞ்சி விருத்தம்

சிந்தடி நான்கின வஞ்சிவி ருத்தம். 81

## 9. எச்சவியல்.

### சில செய்யுள் மரபுகள்

வண்ணம் கூன்வனப்பு வகையுளி பொருள்கோள்
எண்ணிய விகாரம் அடிவரை இல்லன
பிறையும் பிறவும் நிறைவன கொளலே. 82

### வண்ணம் இதுவென்பது

அவற்றுள்,
செய்யுளி னோசையிற் சிறப்புடன் பிறந்து
சொல்லினும் எழுத்தினும் பொருளினும் பொருந்தி
வருவன எல்லாம் வண்ணம்; அவைதாம்,

---

79 குறையானதெனவே வஞ்சித்தாழிசை தனித்து வராதென்க.

82 பொருள் கோள் – பொருளும் பொருள் கோளுமென விரிக்க. எண்ணிய என்றதனால் ஒருமொழி மூவழிக் குறைந்துவரும் விகாரமும் கொள்க. பிறவும் என்றதனால் தண்டகம முதலிய வடமொழி மரபு பற்றித் தமிழில் வந்து வழங்குவனவற்றை ஆய்ந்துகொள்ளப்படும் என்க. நிறைவன என்றதனால் ஆநந்தம் முதலிய குற்றங்களை நீக்கி நோக்கு முதலாக அமைத்துக்கொள்ளப்படும் என்க

83 உம்மையால் பிறவாறும் வண்ணங்கள் வருமென்றறிக. அமிதசாகார் நூறு வண்ணங்கள் கொண்டார்.

பாஅவே தாஅவே வல்லிசை மெல்லிசை
இயைபே அளபெடை நெடுஞ்சீர் குறுஞ்சீர்
சித்திரம் நலிபே அகப்புறப் பாட்டே
ஒழுகே ஒரூஉவே எண்ணே அகைப்பே
தூங்கல் ஏந்தல் உருட்டே முடுகென
நாலைந் தாகவும் நடைபெறு மதுவே. 83

அவற்றின் இயல்.

அவற்றுள்,
பாஅ வண்ணம் சொற்சீர்த் தாகி
நூற்பாற் பயிலும் நோக்கிற் றென்ப. 84

தாஅவே இடையிட் டெதுகைத் தாகும். 85

வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே. 86

மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே. 87

இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே. 88

அளபெடை வண்ணம் அளபெடை பயிலும். 89

நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும். 90

குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும். 91

சித்திர வண்ணம் இருமையும் பயிலும். 92

நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும். 93

அகப்பாட்டு வண்ணம் முடியாது முடியும். 94

புறப்பாட்டு வண்ணம் முடிந்தும் முடியாது. 95

ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும். 96

ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும். 97

எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும். 98

அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும். 99

தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும். 100

ஏந்தல் வண்ணம் ஒருசொற் சிறக்கும். 101

உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும். 102

முடுகு வண்ணம் அடியிறந் தொழுகும். 103

கூன் இன்னதென்பது

செய்யுளின் கருத்தைத் திறனுறச் சுட்டி
அடிமுதல் நிற்பது கூனது வஞ்சியின்
இடையிலும் ஈற்றிலும் நிற்றலும் இயல்பே. 104

வனப்பு வகை.

அம்மை யழகே தொன்மை தோல்விருந்
தியைபு புலனிழை பெனவனப் பெட்டே. 105

அம்மை

அவற்றுள்,
சின்மென் மொழியாற் சிலவடி புனைந்தாங்
கொண்பொருள் பயிற லம்மையென் றுரைப்ப. 106

---

104 உம்மை எதிர்மறையாகலின் நில்லாமையும் உரித்தென்க.

அழகு

செய்யுண் மொழியாற் சிறப்புறு மழகே. 107

தொன்மை

உரையொடு புணர்ந்த பழமையே தொன்மை. 108

தோல்

இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர். 109

விருந்து

புதுவது கிளந்த யாப்பே விருந்து 110

இயைபு

ஞகாரை முதலா னகாரை யீற்றுப்
புள்ளி யிறுதி இயைபெனப் படுமே. 111

புலன்

இயற்சொல் பயின்ற எளிமையது புலனே. 112

இழைபு

நாற்சீ ரடியே நான்கெழுத் தாதி
ஐந்நான் களவும் அடிதொறும் நிரம்பி
உயர்மொழி யான்வரின் இழைபென உரைப்ப. 113

வகையுளி

சொற்பொருள் நோக்கா தடியினு ளியலும்
சீர்தனை நோக்கிச் சிதைத்தல் வகையுளி. 114

பொருள்

அகமும் புறமும் ஆம்பொரு ளிரண்டே. 115

பொருள் கோள்

யாற்றுநீர் நிரனிறை பூட்டுவில் தாப்பிசை
அடிமறி மொழிமாற் றளைமறிப் பாப்பே
கொண்டுகூட் டெனப்பொருள்
[கோள்வகை எட்டே. 116

விகாரம்

வலித்தலும் மெலித்தலும் நீட்டலும் குறுக்கலும்
விரித்தலும் தொகுத்தலும் விகாரம் என்ப. 117

அடிவரையில்லன

பாட்டுரை நூலே மந்திரம் பிசியே
முதுசொல் அங்கதம் வாழ்த்தொடு பிறவும்
ஓரடி யானும் பலவடி யானும்
வருமவை யெல்லாம் அடிவரை யில்லன. 118

பாட்டுரை

அவற்றுள்,
பாட்டிடை மிடைந்தவும் காண்டிகை முதலா
நீட்டிய உரைகளும் பாட்டுரை யாகும். 119

நூல் இன்னதென்பது

சூத்திரம் ஓத்துப் படலமென் றிவற்றான்
அஃகா தகலா தரும்பொருள் சுட்டி
உத்தியோ டுரையகத் தடக்கிப் புரைதப
றுண்ணிதின் விளங்கல் நூலது பண்பே. 120

---

116 வகை என்றதனால் பிறவாறு கூறப்பெறுவனவும் கொள்க.

119 நீட்டிய என்பதனால் ஏதுவும் எடுத்துக்காட்டும் கூறி ஒன்ற உரைப்பவை யாவும் உரையெனவேபடும்.

120 பண்பென்றதனால் நூல் முதலும் வழியும் என இருவகைப்படும். சார்பு கூட்டி மூன்றாகவும் எதிர்நூல் என்று ஒன்றுகூட்டி நான்காகவும் உரைப்பர் என்க. புரைதப என்றதனால் பத்துஅழகும் பிறவும் கொள்க.

சூத்திரம் இன்னதென்பது.

அவற்றுள்,
அரும்பொருள் பலவும் ஆடியிற் செறிந்தாங்
கொண்மையொடு பொருந்தி உரையகத் தடக்கித்
திண்மையும் நுண்மையும் தெரிவுறப் புரைதப
சில்வகை எழுத்திற் றிகழ்வது சூத்திரம். 121

ஓத்து இன்னதென்பது

ஓரினப் பொருள்தொகைஓத்தென மொழிப. 122

படலம் இன்னதென்பது

பலபொருள் விரவித் தொடர்ந்திறின் படலம். 123

உத்தி இன்னதென்பது

நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துதல் தந்திர வுத்தி. 124

உரை இன்னதென்பது

சூத்திரத் துட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே. 125

குற்றம் இவை என்பது

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபயன் இன்மை
என்றிவை பிறவும் குற்றம் நூற்கே. 126

83 உத்தி முப்பத்தாறும் பிறவுமாம் அவற்றையும், நூல், நூற்பாபற்றிய விரிவுகளையும் தொல்காப்பியம் நன்னூல் முதலியவற்றுள் காண்க.

மந்திரம்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப. 127

பிசி

மொழிப்பொருள் கருதாது முன்னத் தியறலும்
ஒப்பின் இயறலும் பிசியென உரைப்ப. 128

முதுமொழி

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளினை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப. 129

அங்கதம்

வெறுப்பினிற் பிறந்த வசையது வெளிப்படை
குறிப்பினிற் ரேன்றிடின் அங்கத மென்ப. 130

வாழ்த்து

உவப்பினும் விருப்பினும் உரைப்பன
[வாழ்த்தே. 131

செய்யுளியுற் புறனடை

கூறிய மரபிற் குறைந்தும் மிக்கும்
வருவன ஒப்பி வழுவின் நீக்கித்
தெரியக் கூறல் தெளிந்தோர் கடனே.

மகாலிங்கம் அச்சகம்,
தஞ்சை.
போன் நெ. 123.

T18
R004